பதிவாளர் நாயகம் திணைக்களம்



செயல்திறன் அறிக்கை - 2019

பொருளடக்கம்

01. அத்தியாயம் – நிறுவனத் தோற்றம் / செயன்முறைக்குட்படுத்தலின் சாராம்சம்

1.1. அறிமுகம்

1.2. நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

1.3. பிரதான கடமைகள்

1.4. நிறுவனக் கட்டமைப்பு

02. அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

2.1. நிருவாகப் பிரிவு

2.2. சிவில் பதிவு செய்தல் பிரிவு

2.3. நொத்தாரிசுப் பிரிவு

2.4. இ-காணிப் பிரிவு

2.5. தகவல் தொழிநுட்பப் பிரிவு

2.6. உரித்துப் பிரிவு

2.7. புள்ளிவிபரப் பிரிவு

2.8. விசாரணைப் பிரிவு

2.9. 2019 ஆம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் சேவை

2.10. 2019 ஆம் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கட்டிடங்கள் மற்றும் திருத்தங்கள்

03. அத்தியாயம் – 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த நிதிப் பெறுபேறு

3.1. நிதி பெறுபேற்றுக் கூற்று

3.2. நிதி நிலைமைப் பற்றியக் கூற்று

3.3. நிதிப் பாய்ச்சல் கூற்று

3.4. வருமானம் சேகரித்தல் பெறுபேறு

3.5. ஒதுக்கப்பட்ட ஒதுக்கத்தினைப் பயன்படுத்தலின் பெறுபேறு

3.6. நி.ஒ.208 இன் பிரகாரம், வேறு அமைச்சு/ திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்த திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட அளிப்புக்கள்

3.7. கணக்காய்வதிபதியின் அறிக்கை

04. அத்தியாயம்- செயல்திறன் காட்டிகள்

4.1. திணைக்களத்தின் செயல்திறன் காட்டிகள்

05. அத்தியாயம்- நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் நோக்கத்தினை (SDG) பூர்த்தி செய்துக்கொள்ளலின் செயல்திறன்.

5.1. அடையாளம் காணப்பட்ட உரிய நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் நோக்கம்

06.அத்தியாயம் – மனிதவள முகாமைத்துவ தோற்றம்

6.1. ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

6.2. நிறுவனத்தின் செயல்திறனில் மனிதவள குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம்

6.3. மனிதவள அபிவிருத்தி

07. அத்தியாயம் – இணக்கப்பாட்டு அறிக்கை



அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சர் கௌரவ ஜனக பண்டார தென்னகோன் அவர்களின் பணிவிடை

எனது அமைச்சின் விடய தலைப்பிற்குரிய நிறுவனமான பதிவாளர் நாயகம் திணைக்களம் கடந்த வருடத்தில், அதாவது 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய கடமைப்பொறுப்புக்களினை மீளாய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த செயற்திறன் அறிக்கை நிருவாகம் என்ற வகையில் மிகவும் முக்கியமான ஆவணமாக மதிக்கின்றேன்.

காணி ஆவணங்களினை பதிவு செய்தல், நொத்தாரிசுகளின் நியமனம் மற்றும் நிருவாகம் செய்தல் மற்றும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களினை பதிவு செய்தல் ஆகிய மக்கள் வாழ்க்கைக்கு மிகவும் நெருங்கிய சேவைகள் பல பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கடமைப் பொறுப்புக்களுடன் இணைந்ததாக உள்ள கடமையின் பொறுப்புக்களினை நன்றாக புரிந்துக் கொண்டு, தமது சேவைக்கு உரிய கடமையாக மாத்திரமன்றி பொறுப்பாக கருதி கடமையாற்றுவதுடன் நாட்டின் சிவில் நிருவாகத்தினை சிறந்ததாக பேணுவதற்கும் இந்த நிறுவனம் காட்டும் தொடர்ச்சியான பங்களிப்பு உண்மையில் பாராட்டத்தக்கதாகும்.

கௌரவ ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்கள் மற்றும் கௌரவ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் வெளிக்காட்டப்பட்டுள்ள சுபீட்சமான அபிவிருத்தி முறைமைக்கு இணங்கியதாக எதிர்காலத்தில் நிருவாக துறையில் வேகமான, அவ்வாறே நிலைத்து நிற்கும் அபிவிருத்தியினை நிலைநிறுத்துவதற்கு நாம் எதிரிப்பார்க்கின்றோம். அதற்கிணங்க மீளாய்வு வருடத்தில் கடமையினை நிறைவேற்றும் பொழுது ஏதாவது தாமதங்கள் நிகழ்த்தப்பட்டமை அவதானிக்கப்படுமாயின், அவை அனைத்தினையும் அடையாளம் கண்டு எதிர்காலத்தினை மிகவும் வினைதிறனாக மற்றும் உற்பத்தி திறனான வேலை நடவடிக்கையாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் செயலாளர் மற்றும் பதிவாளர் நாயகம் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும் சந்தர்ப்பத்தினை வழங்குமாறு பிரார்த்திப்பதுடன், அனைவருக்கும் எனது பாராட்டினை தெரிவித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக இதனைக் கருதுகின்றேன்.



அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சின் செயலாளர் அவர்களின் பணிவிடை

அனைத்து பிரஜைகளுக்கும் தேவையான தொடர்பினை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய அரச நிறுவனமாக பதிவாளர் நாயகம் திணைக்களம் மிகவும் விசேடமான இடத்தில் உள்ளது . இற்றைக்கு 156 வருடங்கள் பூர்த்தியான இந்த திணைக்களம் தீவு முழுவதும் அமைந்துள்ள காணிப்பதிவகங்கள் 45 களினால் அதன் விசேடமான சேவைகள் வழங்கப்படுகின்றன.

தற்பொழுது கணனி தொழிநுட்பத்தினை உபயோகித்து மிகவும் வினைத்திறனான மற்றும் மிகவும் உயர்ந்த குணாம்சத்துடனான சேவையினை வழங்குதல் அரசாங்க கொள்கைகளின் கீழ் திணைக்களத்தினால் திட்டங்கள் பல கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது .இந்த முதலீடுகளின் பிரதிபலன் விசாலமாக 2019 ஆம் ஆண்டாகும் பொழுது மக்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது என இந்த அறிக்கையின் மூலம் தெளிவாகின்றது .பிறப்பு ,இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களினை கணனி பாவனையின் மூலம் விரைவாக வழங்குவதற்கு தீவு முழுவதும் அமைந்துள்ள அனைத்துப் பிரதேச செயலகங்கள் மூலம் நிகழ்வதுடன் பொதுமக்களின் காணிகளின் காணிப்புத்தக ஏடுகளினை கணனி மூலம் வழங்கும் கருமமும் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுக் கொண்டுள்ளது.

எமது அனைத்து சேவைகளும் கணனி தொழிநுட்பத்தினை உபயோகித்து மிவும் வினைத்திறன் மற்றும் குணாம்சம் உடனாக தவறாது வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது .சேவையினை பெறுபவர்கள் எதிர்ப்பார்க்கும் சேவையினை வெற்றிகரமாக வழங்குவதற்காக பதிவாளர் நாயகம் உட்பட அனைத்து அலுவலக ஆளனியினரிடமும் கிடைக்கப்பெற்றுள்ள பங்களிப்பினை மிகவும் பாராட்டுகின்றேன் .தொடர்ந்து வரும் காலங்களில் மக்கள் சேவையினை வழங்குவதற்காக பதிவாளர் நாயகம் உள்ளடங்கலாக அனைத்து பொது அலுவலக ஆளனியினரிடமிருந்தும் கிடைத்துள்ள பங்களிப்பினை மிகவும் மதிக்கின்றேன். தொடர்ந்து வரும் காலங்களிலும் வினைத்திறனான பொது மக்கள் சேவையினை வழங்குவதற்காக கௌரவ அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சர் ஜனக தென்னகோன் அவர்களின் ஆலோசனையின் மற்றும் வழிக்காட்டலின் கீழ் தேவையான அதிகபட்சமான அர்ப்பணிப்பு நிகழ்த்தப்படுவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.



பதிவாளர் நாயகத்தின் பணிவிடை

பொது மக்களின் சிவில் உரிமைகளினை பாதுகாத்து பதிவு செய்யும் நோக்குடன் சிறந்த சேவையினை வழங்குவதுடன், 156 வருடங்கள் பழைமை வாய்ந்த வரலாற்றுக்கு உரிமைக் கோரும் பதிவாளர் நாயகம் திணைக்களம் அசையா மற்றும் அசையும் ஆதனங்களுக்கு உரிய சட்டரீதியான ஆவணங்கள் மற்றும் உரித்தினை பதிவு செய்தல் மற்றும் மக்கள் வாழ்க்கையின் அடிப்படை இல்ல நிகழ்வுகளின் பேரில் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களினை பதிவு செய்வதுடன் அந்த ஆவணங்களினை பாதுகாப்பதுடன் அந்த ஆவணங்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல் என்பதன எமது செயற்பணியாவதுடன் அதற்காக அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி கௌரவ அமைச்சர் மற்றும் அந்த அமைச்சின் வழிக்காட்டல் மற்றும் ஆலோசனைகள் மிகவும் உதவியாக உள்ளது. சிவில் பதிவு செய்தல் நடவடிக்கை பிரதேச செயலகப் பிரிவு வரை பரவலாக்கப்பட்டுள்ளதுடன், நவீன தொழிநுட்பத்தினை பயன்படுத்தி விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களினை கணனிமயப்படுத்தி மிகவும் குறுகிய காலத்தில் சான்றிதழ் பிரதிகளினை வழங்கும் வேலைத்திட்டம் தீவு முழுவதும் உள்ள 332 பிரதேச செயலகங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேலும், பொதுமக்களுக்கு மிகவும் கிட்டிய சேவையினை வழங்கும் நோக்கத்துடன் தீவு முழுவதும் நிலைப்படுத்தப்பட்டுள்ள காணி மற்றும் மாவட்டப் பதிவகங்கள் 45 மூலம் ஆவணம் பதிவு செய்தல் மற்றும் உரித்து பதிவு செய்தலுக்கு உரிய நடவடிக்கையும் சிவில் பதிவு செய்தல் நடவடிக்கையின் மேற்பார்வை மற்றும் சட்டமாக்கப்பட்ட கடமைகளினை நிறைவேற்றுவதற்காக வலய அலுவலகங்கள் 07 நிறுவப்பட்டுள்ளன. பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க காணி உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் காணி உரித்தினை பதிவு செய்தல் நடவடிக்கையிலும் ஈடுப்பட்டுள்ளது. பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் இலங்கை மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கை தரத்தினை வழங்கும் நோக்கத்துடன் ஆவணங்களினை பதிவு செய்வதற்காக 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு நாள் சேவை வேலைத்திட்ம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வேலைத்திட்டம் தற்பொழுது பொது மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறே, அதிமேதக ஜனாதிபதி அவர்களின் பத்து வழிமுறைக் கொள்கையின் தொழிநுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூகம் என்ற கொள்கையின் கீழ் இ-இடம், இ-விபிஇ, இ-உரித்து மற்றும் இ-சனத்தொகை போன்ற திட்டங்கள் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்றது. வினைத்திறன் மற்றும் உற்பத்திறனாக தமு கடமையினை நிறைவேற்றி மொத்த திணைக்களமும் தமது இலக்கு மற்றும் செயற்பணிக்கு 2019 ஆம் ஆண்டில் பயணித்துள்ளதாக சாட்சி வழங்கி செயல்திறன் பெறுபேற்றை 2019 ஆம் ஆண்டில் சமர்ப்பிப்பதற்கு இயன்றமை பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

01. அத்தியாயம்- நிறுவனத்தின் தோற்றம்


1.1 அறிமுகம்

156 வருட பழைமை வாய்ந்த வரலாற்றுக்கு உரிமையுடைய பதிவாளர் நாயகம் திணைக்களம் இலங்கை பிரஜைகளின் சிவில் உரிமைகளினை பாதுகாத்து பதிவு செய்தல் நடவடிக்கையினை நிகழ்த்தும் அடிப்படை நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ள இந்த திணைக்களம், அசையா மற்றும் அசையும் ஆதனங்களுக்குரிய சட்டரீதியான ஆவணங்கள் மற்றும் உரித்தின் பதிவு, விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய அடிப்படை இல்ல நிகழ்வுகளினை பதிவு செய்தல் மற்றும் அதற்குரிய பிரதிகள் ஆகியவற்றினை வழங்கல் கடமைகளினை நிறைவேற்றுகின்றது. இந்த நடவடிக்கை 1992 ஆம் ஆண்டு தொடக்கம் பொது மக்கள் நலனோம்பு மற்றும் சிறந்த வினைத்திறனான சேவையினை வழங்கும் நோக்குடன் சிவில் பதிவு செய்தல் நடவடிக்கை பிரதேச செயலகப் பிரிவு வரை பரவாக்கியுள்ளது.

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க காணி உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் காணி உரித்து பதிவு செய்தல் கடமைப் பொறுப்பும் இந்த திணைக்களத்தின் மூலம் நிகழ்த்தப்படுகின்றது. தீவு முழுவதும் காணி மற்றும் மாவட்டப் பதிவகங்கள் 45 இன் மூலம் பொதுமக்கள் சேவை மேலும் விரிவுப்படுத்தியுள்ளது.

"சுபீட்சமான தொலை நோக்கு" இன் கீழ் திட்டமிடப்பட்டுள்ள புதிய அரசாங்கத்தின் தேசிய கொள்கைகளுக்கு இணங்க மிகவும் உற்பத்தித்திறனான சேவையினை நிறைவேற்றுவதற்காக தற்பொழுது புதிய தொழிநுட்பத்தினை பயன்படுத்தி பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களினை இலகுவாக பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

திணைக்களத்தின் உள்ளடக்கம்



1.2. நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

எமது நோக்கு

பதிவு மற்றும் அது தொடர்பான உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக மக்களுக்கு உதவுதல்

எமது செயற்பணி

இலங்கையின் அசையாத மற்றும் அசையும் சொத்துக்கள் தொடர்பிலான சட்டபூர்வ ஆவணங்களையும் மற்றும் உரித்துப் பதிவு செய்வதன் மூலமும்,

சமூக வாழ்க்கையின் ஆதார நிகழ்வுகளான விவாகம், பிறப்பு, இறப்பு பதிவு செய்வதன் மூலமும்

அவ்வேடுகளைப் பாதுகாப்பது மற்றும் அவ்வாவணங்களில் இருந்து பிரதி வழங்கல் மூலமும்

உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மக்களுக்கு உதவுதல்

1.3 திணைக்களத்தின் கடமைகள் மற்றும் நடைமுறைகள்

பிரதான கடமைகள் மூன்று.

1. பதிவு செய்தல்.
2. பொறுப்புத்தன்மை மற்றும் ஆவண பாதுகாப்பு.
3. உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.

செயற்பாடுகள்

1.1 பதிவு செய்தல்

- ஆவணங்களினை பதிவு செய்தல்
- அசையா சொத்துக்கள் மற்றும் ஆதனங்களுக்கு உரிய ஆவணங்க்ளினை பதிவு செய்தல்
- அசையும் ஆதனங்களுக்கு உரிய ஆவணங்களினை பதிவு செய்தல்
- அற்றோனி தத்துவத்தினை பதிவு செய்தல்

1.2 உரித்துப் பதிவு செய்தல்

- அசையா சொத்துக்களுக்கு உரிய உரித்தினை பதிவு செய்தல்

1.3 சிவில் பதிவு

- இலங்கையினுள் நிகழும் அனைத்து விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களினையும், வெளிநாட்டில் இடம்பெறும் இலங்கையரின் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களினைப் பதிவு செய்தல்.
- பிள்ளையினை மகவேற்பு செய்யும் நீதிமன்ற கட்டளையினை பதிவு செய்தல் மற்றும் அப்பிள்ளைகளின் பிறப்பினை மீள பதிவு செய்தல்.
- கண்டிய விவாகம், மற்றும் விவாகரத்து கோரிக்கையின் பேரில் தீர்மானம் மேற்கொள்ளல்.
- கண்டிய விவாக விவாகரத்தினை பதிவு செய்தல்..

2 பொறுப்பு மற்றும் ஆவண பாதுகாப்பு.

மேற்படி ஆவணங்கள், நொத்தாரிசு உறுதிகளின் இரண்டாம் பிரதி மற்றும் பாதுகாக்கப்படக்கூடிய ஏனைய ஆவணங்கள் மற்றும் ஆவணங்களின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு

3 உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.

உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்குவதற்கு உரிய அனைத்து ஆவணங்களினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் பெற்ற நபர்களுக்கு வழங்குதல்.

இணைச் செயற்பாடுகள்

- விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களினை நியமித்தல் மற்றும் நிருவாகம் .
- நொத்தாரிவு நியமனம் மற்றும் நிருவாகம்.
- உறுதியின் மேல் மற்றும் வேறு ஆவணங்களின் மேல் உரிய முத்திரைக் கட்டணம் செலுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.
- உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் மொழிப்பெயர்ப்பினை வழங்கல்.
- திருத்தங்களினை மேற்கொள்ளல்.
- வாழ்வியல் புள்ளிவிபரவியல் அறிக்கைகளினை பிரதிக்கினைக்குட்படுத்தல்.
- விடுமுறைக் கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்

1. காணி பதிவு செய்தல்

- 1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஆவணங்கள் பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (117 வது அத்தியாயம்)
- 1907 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் (107 வது அத்தியாயம்)
- 1917 ஆம் ஆண்டின் 09 வது நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டம்
- 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க காணி (உடமை அளித்தலினை கட்டுப்படுத்தல்) சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தண்டப்பணம் அதிகரித்தல் சட்டம்
- 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இரத்துச் செய்யப்பட இயலாத நன்கொடை உறுதியினை பாரதூரமான செய்நன்றியினை அடிப்படையாகக் கொண்டு இரத்துச் செய்தல் சட்டம்
- 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இணைமாடி உரிமைச் சட்டம்
- 1902 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தினை பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (122 ஆம் அத்தியாயம்)
- 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (464 வது அத்தியாயம்)
- 1866 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உடமை மற்றும் பழைய உறுதிகள் கட்டளைச் சட்டம் (136 வது அத்தியாயம்)
- பழைய உறுதிகள் மற்றும் ஆவணங்களினை பதிவு செய்தல் கட்டளைச் சட்டம் (137 வது அத்தியாயம்)

- காணி ஆவணங்கள் (காணிப் புத்தக ஏட்டினை மீள தயாரித்தல்) கட்டளைச் சட்டம் (126 வது அத்தியாயம்)

2. **விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல்**

- 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டம்
- 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
- 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
- 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பொது விவாகம் பதிவு செய்தல் சட்டம்
- 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மக வேற்புக் கட்டளைச் சட்டம்
- 1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கொன்சியூலர் சட்டம்
- 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் ஆண்டின் இறப்பு பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் ஆண்டின் இறப்பு பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

02 அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

❖ நிருவாகப் பிரிவு

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிருவாகப் பிரிவினால் திணைக்களத்தின் நிருவாகம் மற்றும் அலுவலக ஆளனியினரின் தாபன நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தலைமை அலுவலகம், அனைத்து வலய அலுவலகங்கள் மற்றும் காணிப் பதிவகங்களின் நிருவாகம் மற்றும் தாபன நடவடிக்கைகளினை ஒழுங்குப்படுத்தல் மற்றும் கண்காணிப்பும் நிருவாகப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

கடமைகள்

1. திணைக்களத்தின் உள்ளக நிருவாகம்.
2. ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம், வெற்றிடம் நிரப்பல், ஆட்சேர்த்தல், பதவியுயர்வு மற்றும் இடமாற்றம் என்பவற்றின் கண்காணிப்பு.
3. திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கிடையில் சிறந்த ஒழுங்கமைப்பு மூலம் ஒழுங்குமுறையான, வினைத்திறனான உற்பத்தித்திறனான நிருவாக மாதிரியினை ஏற்படுத்தல்.
4. பாராளுமன்றம், ஓம்புட்ஸ்மன் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகளின் கூட்டிணைப்பு நடவடிக்கை.
5. தலைமை அலுவலகத்தில் மற்றும் காணிப் பதிவகங்களில் உற்பத்தித்திறன் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மேற்பார்வை.
6. பதவிநிலை அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் செயல்திறன் அறிக்கையின் அளவீட்டாளராக செயற்படல் மற்றும் சம்பள ஏற்றத்தினை அனுமதித்தல்.
7. நி.ஒ.135 இன் கீழ் அதிகாரம் அளித்தலினை கட்டுப்படுத்தலின் கீழ் கொடுப்பனவிற்காக அதிகாரம் வழங்கல் மற்றும் அனுமதித்தல்.
8. திணைக்களத்திற்குரிக வாகனங்களின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை.
9. பதவிநிலை அலுவலர்களின் கூட்டத்தினை கூட்டல், அறிக்கையினை தயாரித்தல் மற்றும் மேற்பார்வை.
10. பதிவாளர் நாயகத்தினால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அளிக்கப்படும் வேறுக் கடமைகள்.

2019 வருடத்தின் செயற்திறன்

தொடர் இலக்கம்	கடமைப் பொறுப்புக்கள்	2019 ஆம் ஆண்டின் செயற்திறன்
01.	போக்குவரத்துப் பிரிவின் மேற்பார்வை	தேவைக்கு இணங்க வாகனங்களினை ஒதுக்கல், வாகனங்களின் பேணல் மற்றும் சேவை நடவடிக்கைகளின் மேற்பார்வை.
02.	மனிதவள முகாமைத்துவம்	பயிற்சி வேலைத்திட்டங்கள் 13 இனை 2019 ஆம் ஆண்டினுள் நடாத்தல்.
03.	திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் இடையில் சிறந்த கூட்டிணைப்பின் மூலம் ஒழுங்குமுறையான, வினைத்திறனான உற்பத்தித்திறனான கட்டுப்பாட்டு மாதிரியினை ஏற்படுத்தல்.	2020 ஆம் வருடத்திற்குரிய செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தலுக்காக பதவிநிலை அலுவலரின் தெரிந்துக் கொள்ளலுடன் தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளல்
04.	தலைமை அலுவலகத்தின் மற்றும் காணிப் பதிவகங்களின் உற்பத்தித்திறன் அபிவிருத்தி நடவடிக்கை மேற்பார்வை	1. வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்களின் மாதாந்த வேலைத்திட்டம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் மேற்பார்வை. 2. வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்களினால் அலுவலக பரிசீலனையினை மேற்கொள்ளல்.
05.	வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கள் மற்றும் காணிப் பதிவாளர்களின் கூட்டங்களினை கூட்டல்.	1. வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கள் கூட்டங்கள் 02. 2. காணிப்பதிவாளர்களின் கூட்டங்கள் 02.

எதிர்கால நோக்கு

1. ஒவ்வொரு காலாண்டினதும் இறுதியில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தினை நடாத்தல்.
2. 2020 ஆம் ஆண்டில் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் 14 பேர்களினை சேர்த்துக் கொள்ளல்.
3. முகாமைத்துவ தகவல் முறைமையினை நிலைப்படுத்தல்.
4. 2020 ஆம் ஆண்டினுள் தனிநபர் கோவைகள் 2700 இனை பரிசீலனை செய்து குறைப்பாடுகளினை பூர்த்தி செய்தல்.

❖ பயிற்சிப் பிரிவு

உரிய பிரிவினை விழிப்புணர்பூட்டும் வேலைத்திட்டம் எமது பிரிவின் மூலம் நிகழ்த்தப்படும்.

2019 வருடத்தின் முன்னேற்றம்

திகதி	நடாத்தப்பட்ட இடம்	பயிற்சி வேலைத்திட்டம்
2019.07.24	பதிவாளர் நாயகம் திணைக்களம்	உற்பத்தித்திறன் அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம்
2019.07.25	பதிவாளர் நாயகம் திணைக்களம்	உற்பத்தித்திறன் அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம்
2019.07.26	பதிவாளர் நாயகம் திணைக்களம்	உற்பத்தித்திறன் அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம்
2019.09.17	பதிவாளர் நாயகம் திணைக்களம்	அடிப்படைக் கணக்கு கொள்கை பயிற்சி வேலைத்திட்டம்
2019/11/25,26	SDFL நிறுவனம்	ஒழுக்காற்று முறைமை – பயிற்சி வேலைத்திட்டம்
2019.11.21/22	SDFL நிறுவனம்	கடித கோவைப்படுத்தல்- பயிற்சி வேலைத்திட்டம்
2019.11.25/26/27	SDFL நிறுவனம்	அலுவலக முறைமை – பயிற்சி வேலைத்திட்டம்
2019.11.28/29	SDFL நிறுவனம்	பொருள் மீளாய்வு- பயிற்சி வேலைத்திட்டம்
2019.12.17	பதிவாளர் நாயகம் திணைக்களம்	“Be a stress free employee” - பயிற்சி வேலைத்திட்டம்
2019.12.19	பதிவாளர் நாயகம் திணைக்களம்	“Art of mindfulness for improving service excellency” - பயிற்சி வேலைத்திட்டம்
2019.12.20	பதிவாளர் நாயகம் திணைக்களம்	செயற்பாட்டுத் திட்டம்- பயிற்சி வேலைத்திட்டம்
2019.12.18/19/20	Miloda Academy	கணக்காய்வு பயிற்சி வேலைத்திட்டம்
2019.11.25/26/27/28/29	SLIDA	விசாரணை நடவடிக்கை பயிற்சி வேலைத்திட்டம்

எதிர்கால நோக்கு

தொடர் இலக்கம்	விபரங்கள்	இலக்குப்படுத்தப்பட்ட குழுக்கள்	பூர்த்தி காட்டி	கால எல்லைகள்
01	உளப்பாங்கு அபிவிருத்தி பயிற்சியினை வழங்கல்	மாத்தறை காணிப் பதிவகத்தின் அனைத்து அலுவலர்கள் மற்றும் மாத்தறை மாவட்டத்திற்குரிய அனைத்து பிரதேச செயலகங்களில் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள்	100	2020.01.25
02	Government Payroll system பற்றிய பயிற்சியினை வழங்கல்	கணக்குப் பிரிவின் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள்	03	2020.01.29,30,31
03	மூன்றாம் தரத்தின் அலுவலர்களின் உளப்பாங்கு அபிவிருத்தி மற்றும் இலஞ்சம் பெற்றுக் கொள்ளல் போலி ஆவணங்களினை தயாரித்தல் மற்றும் ஆவணங்களினை காணாமல் போகச் செய்தல் போனற் வஞ்சனை நடவடிக்கைகள் சம்பந்தமாக நிலவும் சட்டப் பின்புலம் மற்றும் அதற்கான தண்டனை முறைமை பற்றி மூன்றாம் நிலை மட்டத்தின் அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டல்.	தலைமை அலுவலகத்தில், மத்திய பதிவேட்டறையில், மேற்கு வலயத்திற்கு உரிய அனைத்து காணிப் பதிவகங்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலக உதவியாளர் சேவை ஊழியர்கள்	100	2020.01.29
04	தலைமைத்துவ பயிற்சியினைப் பெற்றுக்கொடுத்தல்	நிறைவேற்று பதவிநிலை தரத்தின் அலுவலர்கள், மேற்கு வலயத்திற்கு உரிய அனைத்து காணிப்பதிவகங்களில் நியமிக்கப்பட்டுள்ள மேலதிக காணிப் பதிவாளர்கள்	120	2020.02.20
05	நேர்மையான சட்டத்தினை மதிக்கும் சாரதிகளினை அரசாங்க சேவையில் ஈடுபடுத்துவதற்காக உளப்பாங்கு வளர்ச்சியினை ஏற்படுத்தும் பயிற்சி வேலைத்திட்டத்தினை வழங்கல்.	அனைத்து திணைக்களத்தின் சாரதி சேவை அலுவலர்கள்	16	2020 பெப்ரவரி மாதத்தினுள்
06	உளப்பாங்கு வளர்ச்சி பயிற்சியினை பெற்றுக் கொடுத்தல்..	மேலதிக காணிப் பதிவாளர்கள்	150	2020 மார்ச் மாதத்தினுள்
07	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் ஆவணங்கள் பாதுகாப்பு பற்றிய பயிற்சியினை பெற்றுக் கொடுத்தல்.	திணைக்களத்தின் அனைத்து புத்தகங் கட்டுநர்கள்	80	2020 ஏப்ரல் மாதத்தினுள்

08	உளப்பாங்கு வளர்ச்சி பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.	அபிவிருத்தி அலுவலர்கள்	100	2020 ஏப்ரல் மாதத்தினுள்
09	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.	அபிவிருத்தி அலுவலர்கள்	100	2020 ஏப்ரல் மாதத்தினுள்
10	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.	அபிவிருத்தி அலுவலர்கள்	150	2020 ஏப்ரல் மாதத்தினுள்
11	ஆவணங்கள் பதிவு செய்தல், உரித்துப் பதிவு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல். **I கட்டம்**	மேலதிக காணிப் பதிவாளர்கள்	150	2020 மே மாதத்தினுள்
12	ஆவணங்கள் பதிவு செய்தல், உரித்துப் பதிவு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல். **II கட்டம்**	மேலதிக காணிப் பதிவாளர்கள்	150	2020 மே மாதத்தினுள்
13	ஆவணங்கள் பதிவு செய்தல், உரித்துப் பதிவு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல். **III கட்டம்**	மேலதிக காணிப் பதிவாளர்கள்	100	2020 மே மாதத்தினுள்
14	ஆவணங்கள் பதிவு செய்தல், உரித்துப் பதிவு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல். **IV கட்டம்**	மேலதிக காணிப் பதிவாளர்கள்	100	2020 மே மாதத்தினுள்
15	எழுத்துமூல தொடர்பாடல் மற்றும் கடிதகோவைப்படுத்தல்(அலுவலக முறைமை), நிதி முறைமை பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **I கட்டம்**	முகாத்துவ சேவை அலுவலர்கள்	150	2020 யூன் மாதத்தினுள்
16	எழுத்துமூல தொடர்பாடல் மற்றும் கடிதகோவைப்படுத்தல்(அலுவலக முறைமை), நிதி முறைமை பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **II கட்டம்**	முகாத்துவ சேவை அலுவலர்கள்	100	2020 யூன் மாதத்தினுள்
17	எழுத்துமூல தொடர்பாடல் மற்றும் கடிதகோவைப்படுத்தல்(அலுவலக முறைமை), நிதி முறைமை பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **III கட்டம்**	முகாத்துவ சேவை அலுவலர்கள்	150	2020 யூன் மாதத்தினுள்
18	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் பொதுமக்கள் தொடர்பு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **I கட்டம்**	அலுவலக உதவியாளர்கள்	150	2020 யூலை மாதத்தினுள்

19	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் பொதுமக்கள் தொடர்பு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **II கட்டம்**	அலுவலக உதவியாளர்கள்	150	2020 யூலை மாதத்தினுள்
20	எழுத்துமூல தொடர்பாடல் மற்றும் கடிதகோவைப்படுத்தல்(அலுவலக முறைமை), நிதி முறைமை பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **I கட்டம்**	அபிவிருத்தி அலுவலர்கள்	150	2020 ஆகஸ்ட் மாதத்தினுள்
21	எழுத்துமூல தொடர்பாடல் மற்றும் கடிதகோவைப்படுத்தல்(அலுவலக முறைமை), நிதி முறைமை பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **II கட்டம்**	அபிவிருத்தி அலுவலர்கள்	100	2020 ஆகஸ்ட் மாதத்தினுள்
22	எழுத்துமூல தொடர்பாடல் மற்றும் கடிதகோவைப்படுத்தல்(அலுவலக முறைமை), நிதி முறைமை பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **III கட்டம்**	அபிவிருத்தி அலுவலர்கள்	100	2020 ஆகஸ்ட் மாதத்தினுள்
23	ஆவணங்கள் பதிவு செய்தல், உரித்துப் பதிவு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல். **I கட்டம்**	ஆவண உதவியாளர்கள்	150	2020 செப்தெம்பர் மாதத்தினுள்
24	ஆவணங்கள் பதிவு செய்தல், உரித்துப் பதிவு பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல். **II கட்டம்**	ஆவண உதவியாளர்கள்	150	2020 செப்தெம்பர் மாதத்தினுள்
25	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.**I கட்டம்**	மேலதிக காணிப் பதிவாளர்கள்	100	2020 அக்டோபர் மாதத்தினுள்
26	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.**II கட்டம்**	மேலதிக காணிப் பதிவாளர்கள்	150	2020 அக்டோபர் மாதத்தினுள்
27	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.**III கட்டம்**	மேலதிக காணிப் பதிவாளர்கள்	150	2020 அக்டோபர் மாதத்தினுள்
28	ஆவணப்பதிவு மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள் பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **I கட்டம்**	முகாத்துவ சேவை அலுவலர்கள்	100	2020 நவம்பர் மாதத்தினுள்
29	ஆவணப்பதிவு மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள் பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் **II கட்டம்**	முகாத்துவ சேவை அலுவலர்கள்	100	2020 நவம்பர் மாதத்தினுள்
30	ஆவணப்பதிவு மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள் பற்றிய பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்	முகாத்துவ சேவை அலுவலர்கள்	150	2020 நவம்பர் மாதத்தினுள்

	III கட்டம்			
31	உளப்பாங்கு வளர்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் வளர்ச்சி பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.	நிறைவேற்று பதவிநிலை தர அலுவலர்கள்	58	2020 டிசம்பர் மாதத்தினுள்

❖ சிவில் பதிவு செய்தல் பிரிவு

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவு செய்தல் பிரிவினால் நாட்டினுள் சிவில் பதிவு செய்தல் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளும் நிகழ்த்தப்படுகின்றது. இந்த திணைக்களத்தின் விடய தலைப்பின் கீழ் சிவில் பதிவிற்குரிய கடமைகளினை மேற்கொள்ளும் பிரதேச செயலகங்களின் நிருவாக நடவடிக்கைளுடன் தொடர்புடைய சிக்கல்களினை ஒருங்கமைத்தல் இந்த பிரிவின் மூலம் நிகழ்த்தப்படும்.

கருமங்கள்

1. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களின் தனிநபர் கோவை சம்பந்தமான கடமை நடவடிக்கைகள்.
2. விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் திருத்தத்திற்குரிய நீதிமன்ற அவதானிப்பு அறிக்கைகளினை அனுப்புதல், நீதிமன்ற கட்டளைகளுக்கு இணங்க சான்றிதழ்களில் திருத்தத்தினை நிகழ்த்துவதற்கு பிரதேச செயலகங்களகுக்கு கட்டளைகளினை அனுப்புதல்.
3. நீதிமன்றக் கட்டளைக்கு இணங்க சான்றிதழ்களில் திருத்தத்தினை நிகழ்த்துவதற்கு பிரதேச செயலகங்களுக்கு கட்டளையினை அனுப்புதல்.
4. இந்த பிரிவிற்கு உரிய கட்ளை, சட்டங்களின் ஒதுக்கீடுகளுக்கு இணங்க பதிவாளர் நாயகத்தினை எதிர்வாதியாக்கி நீதிமன்றத்தின் கோவையிடப்படும் வழக்குகளுக்காக உதவி பதிவாளர் நாயகம் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் பதிவாளர் நாயகத்திற்கு பதிலாக அவதானிப்பு மற்றும் சிபாரிசினை அனுப்புதல், தேவையான சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் தோன்றுதல், தேவையான சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியினைப் பெற்றுக் கொள்ளுதல், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் சட்ட கலந்துரையாடல்களில் பங்கேற்றல்.
5. பொது விவாக விவாகரத்து கட்டளைக்கிணங்க, அந்த விவாகச் சான்றிதழ்களில் விவாகரத்துச் செய்தல் பற்றிய குறிப்பினை பிரதேச செயலகத்திற்கு வழங்குதல்.
6. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பிரிவுகளின் மீளமைப்பிற்குரிய சிபாரிசினைப் பெற்றுக் கொண்டு, கௌரவ அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டு, வர்த்தமானியில் பிரசுரித்தல்.
7. இராணுவ நடவடிக்கைகளில் இறந்த படையினரின் மரணத்தினை பதிவு செய்தல், திருத்தஞ் செய்தல், உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.
8. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு சம்பந்தமான விடயங்களுக்குரிய சுற்றுநிருபங்களினை தயாரித்தல்.
9. சிதைவடைந்த விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மீளமைப்பு விண்ணப்பங்களினைப் பெற்றுக் கொண்டு, பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பித்து வழக்கினை கோவையிட்டு, வழக்கு கட்டளைப் பெறப்பட்டதன் பின்னர், அந்த ஆவண்களினை மீளமைத்தல்.
10. விவாகங்களினை பதிவு செய்வதற்காக கிறிஸ்தவ தேவாலயங்களினைப் பதிவு செய்தல்.
11. விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்.
12. விவாகம், பிறப்பு மற்றும் இறப்பசு சான்றிதழ்களினை சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழிப் பெயர்ப்புகளுக்கு மொழிப்பெயர்த்தல்.
13. தலைமை அலுவலத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பொதுமக்கள் சிக்கல்கள் சம்பந்தமாக ஆலோசனை வழங்கல்.

2019 **வருடத்தின் செயல்திறன்**

பதிவாளர்கள்


2019.12.31 ந் திகயில் அறிக் கையிடப்பட்டதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டினுள் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் கடமையாற்றிய பதிவாளர்கள் சம்பந்மான அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்.

2019 **வருடத்திற்குரிய பதிவாளர்கள் பற்றிய விபரங்கள்**	**எண்ணிக்கை**
விவாகம் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் (சிங்கள மொழி)	593
முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் (சிங்கள மொழி	186
விவாகப் பதிவாளர்கள் (சிங்கள மொழி)	342
பிறப்பு மற்றும் இறப்பு வைத்திய பதிவாளர்கள் (சிங்கள மொழி)	39
பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்கள் (சிங்கள மொழி	15
விவாகம் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் (தமிழ் மொழி)	125
முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் (தமிழ் மொழி)	73
விவாகப் பதிவாளர்கள் (தமிழ் மொழி)	27
பிறப்பு மற்றும் இறப்பு வைத்திய பதிவாளர்கள் (தமிழ் மொழி)	9
பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்கள் (தமிழ் மொழி)	26
இளைப்பாறிய பதிவாளர்கள்	58
கேட்டு விலகிய பதிவாளர்கள்	08
இறப்பெய்திய பதிவாளர்கள்	05
சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட பதிவாளர்கள்	02

2018.12.31 ந் திகதியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் பதிவாளர்கள் 1,356 பேர்கள் கடமையாற்றியதுடன் 2019.12.31 ந் திகதியில் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றிய மொத்தப் பதிவாளர்களின் எண்ணிக்கை 1,435 ஆக உயர்வடைந்தது.

2019 **வருடத்தில் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றி பதிவாளர்களின் எண்ணிக்கை**

திணைக்களத்தின் கீழ் 2019.12.31 ந் திகதி கடமையாற்றிய 1,435 ஆன மொத்த பதிவாளர்களிடையே 41.32% பெரும்பான்மையாக சிங்கள மொழி விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களாகும். அவ்வாறே, சிங்கள மொழியில் விவாகம் பதிவு செய்யும் பதிவாளர்களின் எண்ணிக்கை மொத்த பதிவாளர்களின் எண்ணிக்கையில் 23% ஆக அறிக்கையிடப்பட்டதுடன் தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பினை பதிவு செய்யும் வைத்திய பதிவாளர்கள் மொத்த பதிவாளர்களில் 0.63% ஆகிய சிறியளவாகும்.



பதிவு செய்யப்பட்ட விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை

விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கல் சம்பந்தமான விபரங்கள்

மேற்கொள்ளப்பட்ட வேலை	முன்னைய வருடத்தின் மீதி	2019 இல் கிடைத்த விண்ணப்பங்கள்	முன்னைய வருடத்தின் மீதி மற்றும் இந்த வருடத்தில் பெறப்பட்டது	வருடத்தினுள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை	வருடத்தினுள் மீதி
விண்ணப்ப வகைகள்						
(A)**தேடுதல் தேவையற்ற**	21624	3231066	3252657	3247840	5008033	4969
(B)**மூன்று மாதங்களுக்கு குறைவான தேடுதல்கள்**	3513	433416	437012	433834	658400	3238
(C)**வேறு தேடுதல்கள்**	25	9284	9309	9305	9627	14
மத்திய பதிவேட்டறைக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள்	3286	16790	20111	16840	7131	3386

வருடத்தினுள் விண்ணப்பங்களில் இருந்து பெறப்பட்ட வருமானம்

2019 ஆம் வருடத்தினுள், தேடுதல் தேவையற்ற விண்ணப்பங்களில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் பெறப்பட்ட வருமானம் ரூ.536,773,820 ஆக அறிக்கையிடப்பட்டது. மூன்று மாதங்களுக்கு குறைந்த தேடுதலுடனான விண்ணப்பங்களில் ரூ.94,226,580 வருமானமும் வேறு தேடுதல் விண்ணப்பங்களுக்காக ரூ.1,901,600 வருமானமும் உழைக்கப்பட்டது. 2019 ஆம் வருடத்தினுள் மத்திய பதிவேட்டறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூ.709,700 ஆகும்.


பதிவிற்காக அனுப்பப்பட்ட அறிக்கை இரண்டாம் பிரதிகள் பிரதிக்கினை விண்ணப்பம் பற்றிய விபரங்கள்

பதிவு செய்தல்

	2018.12.31 **மீதி**	2019 **வருடத்தில் கிடைத்த விண்ணப்பம்**	2018 **மீதி மற்றும்** 2019 **வருடத்தினுள் கிடைத்த விண்ணப்பம்**	2019 **வருடத்தினுள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட**	2019.12.31 **மீதி**
தோட்ட அறிக்கை					
1.பிறப்பு	0	661	661	661	0
2.இறப்பு	0	5032	5032	4997	35
குருவானவர் விவாகம் அறிக்கை	20	370	390	341	29

2017 ஆம் வருடத்தில் இருந்த விண்ணப்பங்கள் 959 மற்றும் 2018 ஆம் வருடத்தினுள் 3143 ம் உட்பட விசாரணை உரிய விவாகரத்து விண்ணப்பங்கள் 4102 சமர்ப்பிக்கப்படடதுடன் அதில் 2918 இனது நடவடிக்கை 2018 ஆம் வருடத்தினுள் நிகழ்த்தப்படடது.

2019 வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு



2019 ஆம் வருடத்தினுள், பதிவு செய்யப்பட்ட மொத்த விவாகங்களின் எண்ணிக்கை 164,988 ஆனதுடன் அது 2018 ஆம் வருடத்தில் பதிவு செய்யப்பட்ட விவாகங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது 2.96% குறைவினைக் காட்டியது. பிறப்பு 427,246 2019 இல் பதிவு செய்யப்பட்டது 2018 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 30.21% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. திணைக்களத்தினால் 2019 ஆம் வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட மொத்த மரணங்களின் எண்ணிக்கை 144,631 ஆகும். அது 2018 ஆம் வருடத்தில் பதிவு செய்யப்படட மொத்த இறப்புக்களின் எண்ணிக்கையினை விட 3.67% அதிகரிப்பாகும்.

பதிவிற்காக பெறப்பட்ட பிரதிக்கினைகள்

பிரதிக்கினைப் பற்றிய விபரங்கள்	2017.12.31 **மீதி**	2018 **வருடத்தில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்**	2017 **மீதி மற்றும்** 2018 **வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்**	2018 **வருடத்தினுள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட**	2018.12.31 **மீதி**
24 ம் பிரிவு	1346	17065	18991	16572	2401
27 ம் பிரிவு	477	35963	36440	32893	3462
27 (அ) பிரிவு	783	12905	25988	12600	1085
52 ஆம் பிரிவு	697	12530	13227	12192	1015
36 ம் பிரிவு	101	2020	2119	1958	148
கண்டிய விவாகம் விவாகரத்துச் சட்டத்தின் 51 வது பிரிவிற்குரிய விண்ணப்பங்கள்	69	91	160	85	73
முஸ்லிம் விவாகம் விவாகரத்துச் சட்டத்தின் 77 வது பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்	1	335	336	318	18

அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினைகள்


	அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினைகள்
24 பிரிவு	8832
36 பிரிவு	1620
27 (அ) பிரிவு	13113
52 பிரிவு	12462
மகவேற்பு	1177
அனுமான வயதுச் சான்றிதழ்	1739

வெளிநாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்கள் மூலம் பெறப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினைகளின் எண்ணிக்கை

பிரவு	**பெறப்பட்ட பிரதிக்கினைகளின் எண்ணிக்கை**	அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினைகளின் எண்ணிக்கை
24 பிரிவு	2687	2687
27 பிரிவு	239	239
27 (அ) பிரிவு	128	178
36 பிரிவு	478	478
52 பிரிவு	112	112

அதற்கிணங்க 2019 ஆம் வருடத்தினுள் அனைத்து பிரதிக்கினைகளும் அனுமதிக்கப்பட்டது. அவ்வாறே 2018 ஆம் வருடத்தினுள் 24 ஆம் பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்ற மற்றும் அனுமதிக்கப்பட்ட மொத்த பிரதிக்கினைகளின் எண்ணிக்கை 1345 ஆனதுடன் 2019 ஆம் வருடத்தினுள் பெறப்படட மற்றும் அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினைகளின் எண்ணிக்கை 99.78% மட்டில் உயர்வடைந்திருந்தது. 24 ஆம் பிரிவின் கீழான பிரதிக்கினைக்காக அறவிடப்பட்ட கட்டணமானது ரூ.58,050.00 ஆகும். 2018 ஆம் வருடத்தினுள் பெறப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட பிரதிக்கினைகளுடன் (320) ஒப்பிடும் பொழுது 2019 ஆம் ஆண்டில் அனுமதக்கப்பட்ட பிரதிக்கினைகளில் 25% குறைவினைக் காட்டியதுடன் அதன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ.11,950.00 ஆகும். 2019 ஆம் வருடத்தில், 27(அ) பிரிவு, 36 பிரிவு மற்றும் 52 வது பிரிவு என்னும் பிரிவுகளின் கீழ் பிரதிக்கினைப் பத்திரங்களில் பெறப்பட்ட கட்டணங்கள் ஒழுங்குமுறையாக ரூ.8,900.00, ரூ.22,650.00 மற்றும் ரூ.5,600.00 ஆகும்.

வெளிநாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்கள் மூலம் பதிவிற்காக பெறப்பட்ட விவாகம், பிறப்பு மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை.




இரண்டாம் பிரதி பரிசீலனை

2019 ஆம் வருடத்தினுள் பிறப்பு இரண்டாவது பிரதி பரிசீலனைக்காக விண்ணப்பம் 427,246 பெறப்பட்டதுடன் அதில் 423,876 வருடத்தினுள் பரிசீலனை செய்துப் பார்க்கப்பட்டதுடன் அது பெறப்படட


விண்ணப்ப எண்ணிக்கையில் 99.21% ஆகும். விவாகச் சான்றிதழ்களின் இரண்டாம் பிரதிகளின் பரிசீலனைக்காக 2019 ஆம் வருடத்தினுள் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 156,948 களில் 99.1% இனை பூர்த்தி செய்து 2019 ஆம் வருடத்தினுள் 155,548 பரிசீலனை செய்து முடிவுறுத்துவதற்கு திணைக்களத்தின் அலுவல ஆளனியினருக்கு இயலுமாகியது. இறப்புச் சான்றிதழ்களின் இரண்டாவது பிரதிகள் பரிசீலனைக்காக 2019 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 144,631 ஆனதுடன் 2019 ஆம் ஆண்டுக்காக இறப்புச் சான்றிதழ்கள் 144,070 இரண்டாவது பிரதிகள் முடிவுறுத்தப்பட்டது பெறப்பட்ட விண்ணப்பங்கள் 99.61% இனை பூர்த்தி செய்தலின் ஊடாக ஆகும்.

வழங்கப்பட்ட அனுமான வயதுச் சான்றிதழ்களின் அளவு



கால இடைவெளியினுள் வழங்கப்பட்ட அனுமான வயதுச் சான்றிதழ்கள் ஏற்ற இறக்கத்தில் நிலவியது. 2018 ஆம் வருடத்தினுள் வழங்கப்பட்ட அனுமான வயதுச் சான்றிதழ்கள் 5485 ஆனதுடன் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த அனுமான வயதுச்சான்றிழ்களின் எண்ணிக்கையானது 2883 ஆகும். அதற்கிணங்க 2018 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 2019 ஆம் வருடத்தினுள் வழங்கப்பட்ட அனுமான வயதுச் சான்றிதழ்களில் 47.43% கருத்திற்கொள்ளக்கூடிய குறைவினைக் காணலாம்.


விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் மொழிப்பெயர்ப்பு கோரிக்கைகளின் எண்ணிக்கை



2019 ஆம் வருடத்தில் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களினை மொழிப்பெயர்ப்புச் செய்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 54,752 ஆவதுடன் அது முன்னைய

வருடத்தில் பெறப்பட்ட 57,048 ஆன கோரிக்கை எண்ணிகையுடன் ஒப்பிடும் பொழுது 4.02% சிறியளவிலான குறைவினைக் காட்டியது.

வழங்கப்பட்ட விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் மொழிப்பெயர்ப்புகள்




2018 பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் விவாகம், பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்பு பிரதிகள் 77,428 வழங்கப்பட்டதுடன் 2019 ஆம் வருடத்தில் விவாகம்,பிறப்பு, இறப்பச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்பு பிரதிகள் 71,446 வழங்கப்பட்டது 2018 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 7.72% குறைவினை அறிக்கையிட்டாகும்.

- 2019 ஆம் வருடத்தினுள் விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்பு பிரதிகளினை வழங்குதல் ஊடாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூ.32,780,450.00 ஆகும்.

மகவேற்புச் செய்தல்

2019 ஆம் வருடத்தினுள் பதிவாளர் நாயகம் திணைக்களம் மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு அவதானிப்பு அறிகை 1415 அனுப்பியது. அவ்வாறே, நீதிமன்ற கட்டளைக்கு இணங்க திணைக்கள்தினால் 2019 ஆம் ஆண்டில் பிறப்புச் சான்றிதழ்களினை பதவு செய்வதற்காக பிரதேச செயலகத்திற்கு பிரதிக்கினைகள் 1,165 அனுப்பப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது. 2019 ஆம் வருடத்தினுள் நிகழ்த்தப்பட்ட மொத்த மகவேற்கப்பட்ட பிள்ளைகளின் பிறப்புப் பதிவு 1,177 ஆகும்.



2017 ஆம் வருடத்தினுள் மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளைகளின் பிறப்பு பதிவு 1,226 ஆனதுடன் 2018 ஆம் வருடத்தினுள் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளைகளின் பிறப்பு எண்ணிக்கையாக அறிக்கையில் காட்டப்படுவது 1,258 ஆகும். திணைக்களம் 2019 ஆம் வருடத்தில் நிகழ்த்தப்பட்ட மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளைகளின் பிறப்பு பதிவு 1177 ஆனதுடன் அதுவ 2018 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 6.34% சிறியளவான குறைவினைக் காட்டுகின்றது.

காணப்படாமைக்கான சான்றிதழ்

2019.12.31 ந் திகதி பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மொத்த காணப்படாமைக்கான சான்றிதழ்கள் 1112 ஆகும்.

தொடர் இலக்கம்	கடமைகள்	முன்னேற்றங்கள்
1.	விவாகம், பிறப்பு, இறப்பு பதிவாளர்களின் தனிநபர் கோவைகள் சம்பந்தமான கடமை நடவடிக்கைகள் (பதிவாளர் கோவைகள் 1727)	தனிநபர் கடித கோவைகள் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகள் மற்றும் வினைத்திறகான நிறைவேற்றப்பட்டுள்ளது. பதிவாளர்கள் ஆட்சேர்த்தல், சேவை நீடிப்பு, சேவையில் இருந்து இளைப்பாறல் ஆகிய நடவடிக்கைகள் இதனுள் நிகழ்த்தப்படும்.
2.	பதிவாளர்களின் அடையாளஅட்டையினை வழங்கல்	பதிவாளர் அடையாள அட்டைகள் 150 வழங்கப்பட்டுள்ளன.
3.	பதிவாளர் பயிற்சி வேலைத்திட்டத்தினை நடாத்தல்	மேலதிக விவாகப் பதிவாளர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள் 2019.10.01 ந் திகதி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.
4.	மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் பயிற்சி வேலைத்திட்டத்தினை நடாத்தல்	மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்காக மேல்மாகாண சபை செயலகத்தின் கேட்போர் கூடத்தில் 2019.12.23 ந் திகதி பயிற்சு வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது.
5.	சிவில் பதிவு செய்தலுக்குரிய சுற்றுநிருபங்கள் வழங்கல்.	இதன் கீழ் 2019/03, 2019/04, 2019/05, 2019/06, 2019/07 திணைக்கள சுற்றுநிருபம் வழங்கப்பட்டது.
6.	விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் உறுதிபடுத்தப்பட்ட பிரதிகளினை வழங்கல்	2019 ஆம் வருடத்தினுள் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் 97474 மற்றும் மகவேற்புச் சான்றதழ்கள் 1472 வழங்கப்பட்டன.
7.	விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிப்பெயர்ப்புக்கள்	மொழிப்பெயர்ப்பு பிரதிகள் 44683 வருடத்தினுள் வழங்கப்பட்டன.
8.	மகவேற்பு	மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு அவதானிப்பு அறிக்கைகள் 1415 அனுப்பப்பட்டதுடன் நீதிமன்ற கட்டளைக்கு இணங்க பிறப்பினை பதிவு செய்வதற்காக பிரதிக்கினைப் பத்திரங்கள் 1165 பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டன.
9.	விவாகம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் திருத்தம்	இதற்குரிய அவதானிப்பு அறிக்கைகள் 1360 மாவட்ட நீதிமன்றம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டதுடன் நீதிமன்ற கட்டளைகள் 740 பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
10.	விவாகச் சான்றிதழ்களில் விவாகரத்து பற்றிய குறிப்பினை இடுவதற்கு பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பித்தல்	மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட விவாகரத்து கட்டளைக்கு உரிய விவாகரத்தினை குறிப்பிடுவதற்காக பின்முற்றான தீர்வைகள் 7800 பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டன.
11.	ஆவணங்கள் மீள்திருத்தம்	வருடத்தினுள் விண்ணப்பங்கள் 45 சமர்ப்பிக்கப்பட்டதுடன் 02 மீள்அமைப்பு நடவடிக்கைகள் நிகழ்த்தப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன.
12.	தேவாலயங்கள் பதிவு செய்தல்	வருடத்தினுள் விண்ணப்பங்கள் 24 சமர்ப்பிக்கப்பட்டதுடன் தேவாலயங்கள் 06 இனது பதிவு செய்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எதிர்கால நோக்கு

1. சிறுவர் இல்லங்கள் மற்றும் நன்னடத்தை இல்லங்களில் உள்ள பிள்ளைகளுக்காக பிறப்புச் சான்றிதழ்கள்/ அனுமான வயதுச் சான்றிதழ்களினை வழங்கல் (முன்னோடி திட்டங்கள் – 03 மாவட்டங்கள்)
2. பிறப்புச் சான்றிதழ்களில் பெயர் திருத்தத்திற்காக தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில் முறைமையினை தயாரித்தல்.
3. 2020 ஆம் வருடம் தொடக்கம் விவாகரத்து பின்முற்றான தீர்வு சம்பந்தமான தரவு முறைமையினை நிறுவுதல்.

❖ நொத்தாரிசுப் பிரிவு


நொத்தாரிசுகள் பற்றிய விபரங்கள்

2018 ஆம் ஆண்டினுள் நொத்தாரிசுக் கடமையில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் மற்றும் சட்டத்தரணிகள் அல்லாத நொத்தாரிசுகளின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	விபரம்	சட்டத்தரணி நொத்தாரிசு	சட்டத்தரணிகள் அல்லாத நொத்தாரிசு	மொத்த எண்ணிக்கை
1	2019 ஜனவரி 01 ந் திகதியில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கை	12,335	428	12,763
2	வருடத்தினுள் புதிதாக தொழிலினை ஆரம்பித்தவர்களின் எண்ணிக்கை	743	10	753
3	வருடத்தினுள் கேட்டு விலகியவர்களின் எண்ணிக்கை	23	3	26
4	வருடத்தினுள் கடமை நிறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை	21	1	22
5	வருடத்தினுள் இறப்பெய்தியவர்களின் எண்ணிக்கை	38	15	53
6	2019 டிசம்பர் 31 ந் திகதியில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கை	12,996	419	13,415


2019 ஆம் ஆண்டு இறுதியில் சட்டத்தரணி நொத்தாரிசுகள் 743 பேர்களும் சட்டத்தரணிகள் அல்லாத நொத்தாரிசுகள் 10 பேர்களும் கடமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் 2019.12.31 ந் திகதி இந்த திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் மொத்த நொத்தாரிசுகளின் எண்ணிக்கை 13,415 பேர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 2019 ஆம் ஆண்டு இறுதியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் மொத்த நொத்தாரிசுகளின் எண்ணிக்கை 5.1% இனால் உயர்வடைந்திருந்தது. அவ்வாறே அதில் 96.88% சட்டத்தரணிகள் நொத்தாரிசுகளானதுடன் சட்டத்தரணிகள் அல்லாத நொத்தாரிசுகள் 3.12 % சிறியளவாகியிருந்தது.



2019 **ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை**

- புதிதாக வழங்கப்பட்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை -***332***
- மேலதிக மொழியில் கடமையாற்றுவதற்காக -***390***
- நீதிமன்ற வலயத்தினை மாற்றுவதற்காக -***170***




நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் நொத்தாரிசு பிரிவினால் வழங்கப்படும். 2018 ஆம் வருடத்தில் நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் 827 வழங்கப்பட்டதுடன் 2019 ஆம் வருடத்தினுள் வழங்கப்பட்ட மொத்த நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தின் எண்ணிக்கை 892 வரை உயர்வடைந்துள்ளது.


மேலும் 2019 ஆம் வருடத்தினுள் புதிதாக வழங்கப்பட்ட நொத்தாரிசு அனுமதிப்பத்திரங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூ.664,000 ஆனதுடன் ரூ.780,000 வருமானம் மேலதிக மொழியில் கடமையாற்றுவதற்காக நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் மூலமும் ரூ.340,000 வருமானம் நீதிமன்ற வலயத்தினை மாற்றுவதற்கான அனுமதிப்பதிரம் வழங்கப்படலினாலும் அறிக்கையிடப்பட்டது.

காணி ஆவணங்களினை பதிவு செய்யும் பொழுது ஏற்பட்ட தவறினை திருத்துதல்

2019 ஆம் வருடத்திற்காக பெறப்பட்ட வேண்டுக்கோள்களின் எண்ணிக்கை 3,148 ஆக அறிக்கையிடப்பட்டதுடன் அது 2018 ஆம் வருடத்தினுள் 3033 வேண்டுக்கோள்களுடன் ஒப்பிடும் பொழுது 3.65% ஆன சிறிய உயர்வாகும். 2019 ஆம் வருடத்தினுள் காணி ஆவணங்கள் பதிவு செய்தல் தவறுக்ள 3,025 திருத்தப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அது பெறப்பட்ட வேண்டுகோள் எண்ணிக்கையில் 96% ஆன பூர்த்தியாகும்.




சிதைவடைந்த காணிப் புத்தக ஏட்டினை மீள தயாரித்தல்




2019 **ஆம் ஆண்டில் சிதைவடைந்த காணி ஆவணங்களினை மீள தயாரிப்பதற்காக பெறப்பட்ட வேண்டுக் கோள்களின் எண்ணிக்கைகள்** 105 **ஆனதுடன் தனிப்பட்ட தொகையில் கோவைகள் 46 இனது வேலை முடுவுறுத்தப்பட்டதுடன் இறுதிக் கட்டத்தினை கடந்த கோவைகள் 9 ஆகும். கோவைகள் 38 இனது வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வேலை ஆரம்பிக்கப்பட்டு குறைப்பாடுகள் இன்றி நிதிக் கிடைக்கும் வரை உள்ள கோவைகளின் எண்ணிக்கை 12 ஆகும்.**

ஆவணம் பதிவு செய்தல்

- 2019 வருடத்தினுள் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற உறுதிகளின் எண்ணிக்கை - 1,112,126
- 2019 வருடத்தினுள் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற அற்றோணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை - 55,693
- 2019 வருடத்தினுள் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற உரித்து அட்டவணைகளின் எண்ணிக்கை - 59,208



2019 ஆம் வருடத்தினுள் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற மொத்த உறுதிகளின் எண்ணிக்கை 1,115,620 ஆனதுடன் 2018 ஆம் வருடத்தில் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற மொத்த உறுதிகளின் எண்ணிக்கையாக அறிக்கையிடப்பட்ட 1,491,735 உடன் ஒப்பிடும் பொழுது, 25% கருத்திற்கொள்ளக்கூடிய இறக்கமாகும். 2019 ஆம் வருடத்தில் பதிவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளில் இருந்து பெறப்பட்ட திரட்டப்பட்ட வருமானம் ரூ.205,003,282.50 ஆக அறிக்கையிடப்பட்டது.



பதிவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட அற்றோணி தத்துவங்களின் எண்ணிக்கை 2016-2019 வரையான கால இடைவெளியில் ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் பதிவிற்காக கிடைக்கப்பெற்ற மொத்த அற்றோணி தத்துவங்களின் எண்ணிக்கை 55693 ஆக அறிக்கையிடப்பட்டது. 2018 ஆம்


வருடத்துடன் ஒப்பிடும் பொழுது அது 34.85% குறைவாக கணக்கிடப்பட்டது. 2019 ஆம் வருடத்தில் அற்றோணி தத்துவங்கள் பதிவின் மூலம் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற மொத்த வருமானம் ரூ.95,342,602.00 ஆகும்.

ஆவணங்கள் பாதுகாப்பு


2019 ஆம் ஆண்டினுள் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாம் பிரதிகளின் எண்ணிக்கை 792,558 ஆனதுடன் 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற இரண்டாம் பிரதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது 123,239 குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கிடைத்தல்

- காணிப்புத்தகங்கள் சுருக்கப்பிரதிகள் - ***1130821***
- உறுதி பிரதிகள் - ***313353***
- அற்றோணி தத்துவங்கள் - ***200***



2018 ஆம் ஆண்டில் காணிப் புத்தகங்களின் சுருக்கப்பிரதிகளுக்காக விண்ணப்பங்கள் 1,134,422 கிடைக்கப்பெற்றதுடன் 2019 ஆம் வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,130,821 வரையான சிறிய இறக்கத்தினை காட்டியது.



2018 ஆம் வருடத்தினுள் உறுதி பிரதிகளுக்காக விண்ணப்பங்கள் 219,636 கிடைக்கப்பெற்றதுடன் 2019 ஆம் வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 313,353 வரை 93,717 இனால் உயர்வடைந்துள்ளது.

ஆவணங்களினை தேடுவதற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை

- காணிப் புத்தகங்கள் -***106,463***
- உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்கள் -2,298

ஒரு நாள் சேவை வேலைத்திட்டம்

திணைக்களம் 155 வருட வரலாறு தொடக்கம் நிலவிய முறைமையினை மாற்றி காணி பதிவின் போது பொதுமக்களுக்கு நிகழும் சிரமத்தினை தவிர்ப்பதற்காக விரைவான சேவையினை பெற்றுக் கொடுத்தலும் இதற்கு முன்னர் உழைத்த வருமானத்தினை விட அதிகமான வருமானத்தினை அரசாங்கத்திற்கு ஈட்டிக் கொடுத்தலும் ஒரு நாள் சேவையின் பிரதான நோக்கமாகும்.

கீழ் குறிப்பிடப்படும் கருமங்கள் இந்த விரைவு சேவையின் கீழ் நிறைவேற்றப்படும்.

1. ஆவணங்கள் பதிவு செய்தல்- (117 ஆம் அத்தியாயமான ஆவணங்கள் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்திற்கு உரித்தான கருமங்கள்)
2. 1988 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவு செய்தல் சட்டத்தின் பிற்கொடுக்கல் வாங்கல் பதிவு செய்தல்.
3. அற்றோணி அனுமதிப்பத்திரம் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்திற்கு (122 வது அத்தியாயம்) கருமங்கள்
4. காணிப் புத்தக சுருக்கப் பிரதிகள், உறுதி பிரதிகள், அற்றோணி தத்துவ பிரதிகள், அற்றோணி தத்துவ சுருக்கப்பிரதிகள், உரித்துச் சான்றிதழின் சுருக்கப்பிதிகள் மற்றும் உரித்துச் சான்றிதழ் சாதனங்களின் சுருக்கப்பிரதிகளினை வழங்கல்.

இந்த விரைவு ஒரு நாள் சேவை 2019.03.16 ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி கருமங்களினை நிறைவேற்றுவதன் ஊடாக கிடைக்கப் பெறும் வருமானத்தில் 70% அரசாங்கத்தின் நிதியாக திரட்டு நிதிக்கும், 30% அளவிலானவை பதிவாளர் நாயகம் திணைக்களத்தின்

இதற்காக பங்களிப்பாற்றும் அலுவலக ஆளனியினருக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவாகவும் செலுத்துவதற்கு திறைசேரியின் பிரதிச் செயலாளரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எமது திணைக்களத்தின் ஒருநாள் சேவை கீழ் குறிப்பிடப்படம் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- தலைமை அலுவலகம்
  - அற்றோணி தத்துவம் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்திற்கு (122 வது அத்தியாயம்) உரிய கருமங்கள்.
  - அற்றோணி தத்துவ சான்றிதழ் பிரதிகள், அற்றோணி தத்துவ சுருக்கப் பிரதிகள், உரித்துச் சான்றிதழ் சுருக்கப்பிரதிகள் வழங்கல்.
  - காணிப் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் வலய அலுவலகங்களின் ஒழுங்குப்படுத்தல்.

- வலய அலுவலகங்கள் 07
  - அற்றோணி தத்துவம் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்திற்கு (122 வது அத்தியாயம்) உரிய கருமங்கள்.

- காணிப்பதிவகங்கள் 45
  - ஆவணங்கள் பதிவு செய்தல் -117 அத்தியாயமான ஆவணங்கள பதவு செய்தல் கட்டளைச் சட்டத்திற்குரிய கருமங்கள்
  - கொழும்பு, கம்பஹா 117 அத்தியாயமான ஆவணங்கள பதவு செய்தல் கட்டளைச் சட்டத்திற்குரிய கருமங்களுக்கு மேலதிகமாக அற்றோணி தத்துவங்கள் பதிவு செய்தல் சட்டத்திற்குரிய (122 அத்தியாயம்) கருமங்கள்.

நிதிப் பிரிவிற்கு கிடைத்த அறவிடல் வகைப்படுத்தல் அறிக்கைக்கு இணங்க 2019.03.16 தொடக்கம் 2019.12.31 ந் திகதி வரை விரைவு ஒரு நாள் சேவை மூலம் 356 மில்லியன்களுக்கு கிட்டிய வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

தொடர் கட்டங்கள் -

- இற்றைவரை ஒருநாள் சேவையின் கீழ் பதிவிற்காக கிடைக்கப்பெறாத ஏனைய ஆவணங்கள் ஒருநாள் சேவைக்குரிய உரித்தாக்கிக் கொள்வதற்குரிய இயலுமை நிலவுகின்றதான என பரிசீலனை செய்துப் பார்ததல் மற்றும் அவ்வாறு ஒருநாள் சேவைக்கான இயலுமையின் கீழ் அந்த ஆவணங்களினை பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- தலைமை அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

திணைக்களத்தினால் அறவிடப்படும் கட்டணங்கள்

ஆவணங்கள் பதவு செய்தல் கட்டளைச் சட்டம், நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் மற்றும் அற்றோணி தத்துவக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் அறவிடப்பட்ட கட்டணங்கள்.

